රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Services, Provincial Councils and Local Government

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන
தொலைபேசி:(94) 011- 2694560
Telephone

ෆැක්ස්
தொலைநகல்:(94) 011- 2692254
Fax

ඊ-මේල්
மின்னஞ்சல்:dgcs@pubad.gov.lk
E-mail

වෙබ් අඩවිය
இணையத்தளம்: www.pubad.gov.lk
Web Site

---

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/Policy/පොදු/01

ඔබේ අංකය / Your No:

දිනය / திகதி: / Date: 2021.09.17

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**<u>அபிவிருத்தி அலுவலர் சேவையின் தாபன நடவடிக்கைகள் சம்பந்தமாக அனுப்பப்பட்ட கடிதங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்</u>**

மேற்படி விடயம் தொடர்பாக எனது சம இலக்க 2021.01.20 திகதியிட்டப்பட்ட கடிதத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

02. அபிவிருத்தி அலுவலர்களின் தாபன நடவடிக்கைகள் தொடர்பில், இணைந்த சேவைகள் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படும் கடிதங்களில் உள்ள குறைபாடுகள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன், குறித்த ஆவணங்களை பின்வரும் இணைப்புகளின் (links) ஊடாக சரிபார்க்க முடியும்.

I. உள்ளீர்த்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் காணப்பட்ட குறைபாடுகள்
https://www.pubad.gov.lk/web/images/contents/cs-services/dos/dos-deficiencies-in-the-documents-submitted-for-absorption.pdf

II. சேவையை நிரந்தரமாக்குதல், பதவி உயர்வு மற்றும் ஏனைய தாபன நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் உள்ள குறைபாடுகள்
https://www.pubad.gov.lk/web/images/contents/cs-services/dos/dos-deficiencies-in-the-doc-submitted-for-confirmation-promotion-other-organizational-matters.pdf

III. இடமாற்றத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் உள்ள குறைபாடுகள் https://www.pubad.gov.lk/web/images/contents/cs-services/dos/dos-transfer-requests-with-deficiencies.pdf

03. எவ்வாறாயினும், அமைச்சின் இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் உள்ள குறைபாடுகள் போதுமான அளவு பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பப்படுவதில்லை என்பதையும் என்னால் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

04. எனவே, உங்களது நிறுவனத்தின் அபிவிருத்தி அலுவலரின் தாபன நடவடிக்கைகளை மேற்கொள்ளும், விடயத்திற்குப் பொறுப்பான அலுவலருக்கு, அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள மேற்கண்ட ஆவணங்களை அவ்வப்போது பரிசீலனை செய்யுமாறு அறிவிக்கும்படி தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

05. அத்துடன், தொடர்பாடல் நடவடிக்கைகளை மேலும் இலகுவாக மேற்கொள்வதற்காக, உங்கள் நிறுவனத்தின் அபிவிருத்தி அலுவலர்களின் தாபன நடவடிக்கைகளை மேற்கொள்ளும், விடயத்திற்குப் பொறுப்பான அலுவலரின் விபரங்கள் மற்றும் இவ் ஒருங்கிணைப்பு சம்பந்தமான தாபன நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பதவிநிலை உத்தியோகத்தரின் விவரங்களை இங்கு தரப்பட்டுள்ள இணைப்பிற்கு ஏற்ப தயாரித்து, 2021.09.30 ஆம் திகதிக்கு முன் adcsdos2.pubad@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்